செய்தி வெளியீடு எண் 350 நாள் 27.9.2006

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம்</u>

தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து நிதிநிலை அறிக்கையிலும் உறுதியளித்தபடி படிப்பு முடிந்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் காத்திருக்கும் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காத இளைஞர்களின் துயரத்தைத் துடைத்திடும் வகையில், மாதம் ஒன்றுக்கு, எஸ்.எஸ்.எல்.சி அல்லது பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.150/–; ப்ளஸ் 2 அல்லது மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.200/–; மற்றும் இளங்கலைப் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரிகளுக்கு ரூ.300/– வீதம் மூன்றாண்டு காலத்திற்கு வேலை வாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கும் திட்டம் உத்தமர் காந்தி அடிகள் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாளன்று தொடங்கி வைக்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அக்டோபர் 2ந் தேதி துவக்கி வைக்கப்படுவதாக இருந்த வேலை வாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம், அக்டோபர் 13 மற்றும் 15ந் தேதிகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறுவதையடுத்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ளதால் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் துவக்கி வைக்கப்படும் மறு தேதி அக்டோபர் மாதம் இறுதியில் அறிவிக்கப்படும்.

<u>வெளியீடு</u> இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9